***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No. 171/2024 – P.W. 1   (LW-1)***

| | |
|---|---|
| *Name* | கார்த்திகணேசன் |
| *Father/Husband's Name* | சுந்தரமூர்த்தி |
| *Village* | சேரி |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *42* |

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.02.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அலமேலு என்பவர் எனது அம்மா ஆவார். அவர் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டார். கடந்த 04.02.2024-ம் தேதி மாலை 07.00 மணியளவில் எனது தாயார் அலமேலு என்பவர் சொசைட்டி குழுவில் ஆதார் கார்டு கொடுப்பதற்காக நடந்து சென்றார். ஆதார் கார்டை கொடுத்து மீண்டும் கொள்ளு பட்டறை எதிரே வந்துக்கொண்டிருந்த போது இருசக்கர வாகனம் 3938 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் வந்த நபர் ஜெயசந்திரன் என்பவர் எனது அம்மாவின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக அங்கிருந்த ஆண்டியப்பன் என்ற நபர் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். நான் உடனே சம்பவயிடத்திற்கு சென்றேன். நான் என் அம்மாவை தலையில் கை வைத்து தூக்கியபோது, தலை பின்பகுதியில் ரத்தமாக இருந்தது. பேச்சு மூச்சு இல்லை. அங்குள்ள நபர்களில் யாரோ 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. அந்த ஆம்புலன்ஸில் எனது அம்மாவை அழைத்துக்கொண்டு மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். அங்குள்ள மருத்துவர்

எனது அம்மாவிற்கு முதலுதவி சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். அதன் அடிப்படையில் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுமதித்தேன். எனது தாயார் மறுநாள் மதியம் 2 மணியளவில் இறந்துவிட்டார். நான் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எனது தாயாருடன் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து புகார்வாக்குமூலம் பதிவு செய்துக்கொண்டார்கள். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்தபோது என் அம்மாவின் வயதை குறித்து கேட்டார்கள். நான் 60 வயது என்று சொல்லியுள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் 05.02.2024-ம் தேதியன்று காலை 11 மணிக்கு புகார் வாக்குமூலம் பதிவு செய்த பிறகு போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். எனது வீடு சேரி பஸ் ஸடாண்டிற்கு பக்கத்தில் கிழக்கு பக்கமாக போகும் ரோட்டில் 100 மீட்டர் தொலைவில் எனது வீடு உள்ளது. அந்த ரோடு திருத்துறைப்பூண்டி டூ மன்னார்குடி சாலையில் எனது தெரு ரோடு பிரியும் இடத்திற்கு தெற்கு பக்கத்தில் தான் பேருந்து நிறுத்தம் மற்றும் பள்ளி உள்ளது என்றால் சரிதான். வடக்கு பக்கத்தில் விநாயகர் கோவில் மற்றும் வேப்பமரம் உள்ளது என்றால் சரிதான். நேர் எதிர்தாற்போல் ரோட்டின் மேற்கு பக்கத்தில் குமரவேல் வீடும் ராசு என்பவரும் வீடும் உள்ளது.

எங்களது தெரு சாலை பிரிவதற்கு வடக்கு பக்கத்தில் ஆண்டியப்பன் வீடு உள்ளது. விநாயகர் கோவிலிருந்து 3 வீடு தள்ளி ஆண்டியப்பன் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த பள்ளி அருகில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். மாலை நேரத்தில் அந்த இடத்தில் கோட்டூர் காவல் துறையினர் வாகன சோதனையில் ஈடுபடுவார்கள் என்றால் சரிதான். எனது தாயார் வரும்போது வயோகத்தின் காரணமாக வாகனம் வருவதை கவனிக்காமல் ரோட்டை

கடக்கும்போது இந்த விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 13.02.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No. 171/2024 – P.W. 2 (LW2)***

| | |
|---|---|
| *Name* | ஆண்டியப்பன் |
| *Father/Husband's Name* | தெட்சிணாமூர்த்தி |
| *Village* | கீழச்சேரி |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *55* |

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.02.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரில் வசித்து கீழச்சேரி மெயின் ரோட்டில் கொள்ளுபட்டறை வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கார்த்திகணேசன் என்பவரை தெரியும். அலமேலு என்பவரை தெரியும். கடந்த 04.02.2025-ம் தேதி மாலை 07.00 மணியளவில் நான் என் வீட்டில் டிவி பார்த்துக்கொண்டிருந்தேன். தீடிரென்று சத்தம் கேட்டது. நான் பார்த்தபோது அலமேலு என்பவர் அடிபட்டு கீழே கிடந்தார். நான் பார்க்கும்போது அலமேலுவை சுற்றி கூட்டமாக நபர்கள் நின்றுக்கொண்டிருந்தார்கள். எனக்கு ரத்தத்தை பார்த்தால் அலர்ஜி. அதனால் நான் பக்கத்தில் செல்லவில்லை. பின்னது எனது வீட்டிற்குள் வந்து கார்த்திகணேசனுக்கு போன் செய்து உன் அம்மா விழுந்து அடிபட்டார் என்று போன் மூலம் தகவல் சொன்னேன். இரண்டு, மூன்று நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 04.02.2024-ம் தேதி இரவு சுமார் 7 மணியளவில் அலமேலு என்பவர் ஆதார் கார்டு, மற்றும் ரேசன் கார்டு ஜெராக்ஸ் ஆகியவற்றை குழு தலைவர் ஜோதிகுமார் கேட்டதாகவும், அதை அவர் கொடுத்துவிட்டு, இடது ஓரமாக என் கொள்பட்டறை எதிரே நடந்து வந்துக்கொண்டிருந்த போது, அவருக்கு பின்னால் வந்த TN 49 AU 3938 என்ற பதிவெண் கொண்ட Suzuki Avate என்ற இருசக்கர வாகனத்தை அதிவேகமாவும், ஆஜராகிரதையாகவும் கவனக்குறைவாகம் ஓட்டி வந்து அலமேலு மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், அதை நான் நேரில் பார்த்ததாகவும், அதன் பின்னர் அவரது மகன் கார்த்திக்கணேசனுக்கு தகவல் சொன்னேன் என்றும், பின்னர் காயம்பட்ட அலமேலு என்பவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்றும், போலீசார் விசாரணையிலும், வாக்குமுலத்திலும் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக கூறிவிட்டு தற்போது என்கே தெரிந்த காரணத்தினால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஓம்/-) ஆ.சீதாலெட்சுமி 13.02.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 171/2024 – P.W. 3 (LW3)***

| | |
|---|---|
| *Name* | சுமதி |
| *Father/Husband's Name* | செல்வம் |
| *Village* | திருமக்கோட்டை |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *42* |

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.02.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 கார்த்திகணேசன் என்பவர் என் உடன்பிறந்த சகோதர் ஆவார்கள். அலமேலு எனது அம்மா ஆவார். அவர் தற்போது விபத்தில் இறந்துவிட்டார். கடந்த 04.02.2024-ம் தேதி இரவு 07.00 மணியளவில் எங்கள் கீழச்சேரி வீட்டிலிருந்து குழுவில் ஆதார் கார்டு ஜெராக்ஸ் கேட்டதால் அதை குழுகாரர்களிடம் கொடுத்துவிட்டு, திரும்ப வீட்டிற்கு நடந்து வந்துக்கொண்டிருந்த போது கொள்ளுபட்டறை அருகே அடிபட்டு விட்டதாக எனது தம்பி கார்த்திகணேசனுக்கு போன் மூலம் தகவல் கிடைத்தது. நானும் எனது தம்பியும் ஓடிபோய் பார்த்தோம். நாங்கள் பார்த்தபோது எனது அம்மா அடிபட்டு கீழே விழுந்து கிடந்தார். அவரை தூக்கி பார்த்தபோது காது பகுதியிலும், தலையின் பின்பகுதியிலும் ரத்தமாக இருந்தது. நான் அருகிலிருந்தவர்களிடம் என்ன நடந்தது என்று விசாரித்தபோது, எனது அம்மா ஓரமாக நடந்து சென்றதாகவும், Suzuki இருசக்கர வாகனத்தை லைட் இல்லாமலும், ஹாரன் அடிக்காமலும், எனது அம்மா மீது மோதிவிட்டார் என்று தெரிந்துக்கொண்டேன். யார் வாகனத்தை ஓட்டி வந்தார்கள் என்ற விவரத்தை அப்போது தெரிந்துக்கொண்டேன். ஆனால் தற்போது பெயர் ஞாபகமில்லை. ஆனால் அந்த நபருக்கும் என் தம்பி வயது தான் இருக்கும்.

பின்னர் 108 ஆம்புலன்ஸில் காயம்பட்ட என் அம்மாவை மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். நாங்கள் மருத்துவமனையிலிருந்த போது மற்றொரு 108 ஆம்புலன்ஸில் வந்த என் அம்மாவிற்கு விபத்தை ஏற்படுத்திய நபருக்கும் காயம் ஏற்பட்டு அவரை அழைத்து வந்தார்கள். அவரை நான் மருத்துமனையில் பார்த்துள்ளேன். மன்னார்குடி அரசு மருத்துவமனையில் என் அம்மாவிற்கு முதலுதவி சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மறுநாள் மதியம் 2 மணியளவில் என் அம்மா அலமேலு இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது அம்மா ஓரமாக நடந்து சென்றதாகவும், Suzuki இருசக்கர வாகனத்தை லைட் இல்லாமலும், ஹாரன் அடிக்காமலும், எனது அம்மா மீது மோதிவிட்டார் போலிசார் விசாரரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அப்போது சொல்லவில்லை. மறுபடியும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. அதனால் சொல்லவில்லை. லைட் இல்லாத விவரத்தையும் நான் போலிசாரிடம் சொல்லவில்லை. எனது அம்மா தான் வாகனம் வருவதை கவனிக்காமல் ரோட்டை கடக்கும்போது விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 13.02.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.